**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 55/2020**

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 05.08.2026 | | |
| பெயர்: | வீரபாண்டியன் (DW–2 Chief ) | தகப்பனார் பெயர்: | கலியபெருமாள் |
| கிராமம்: | மருதங்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | VAO, திருமயிலாடி | வயது : | 52/2026 |

**முதல் விசாரணை : 05.08.2026**

1. நான் திருமயிலாடி கிராமத்தில் தற்போது கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன்.

2. தாவா சொத்தின் புல எண்.262H/36 என்பது இதற்கு முன்பு புல எண். 262H/11 ஆக இருந்தது. அதற்கான புல வரைபடம் தாக்கல் செய்கிறேன். அந்த புல வரைபடத்தின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண். 262H/11 பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கான புல வரைபடம் தாக்கல் செய்கிறேன். அந்த புல வரைபடத்தின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. புல எண்.262H/36ன் விஸ்தீரணம் என்பது 0.06.5 ஏர்ஸ் ஆகும். மேற்படி புல எண் வடக்கில் 4 மீ, தெற்கில் 7 மீ, கிழக்கு மற்றும் மேற்கில் 120.5 மீ ஆகும். புல எண்.262H/35 ன் அளவுகள் தனியாக உள்ளது. இதில் அது வராது. புல எண்.262H/35ல் RCC மாடி வீடு உள்ளது, புல எண்.262H/36ல் கூரை வீடு உள்ளது. புல எண்.262H/36 என்பது கோவிந்தராஜ் என்பவர்

பெயரில் பட்டா உள்ளது.

4. புல எண்.262H/35ன் தற்போதைய புதிய எண் என்பது புல எண்.262H/16 ஆகும். இதன் விஸ்தீரணம் 100 ச.மீ (1 ஏர்ஸ்). அதன் பட்டா துரைசாமி, சுப்பையா, கோவிந்தராஜ் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. புல எண்.262H/36ன் நான்கெல்லை என்பது வடக்கில் மோகன் வீடு, தெற்கில் வாய்க்கால், கிழக்கில் முருகன் வீடு, மேற்கில் கண்ணன் வீடு என்பதாகும்.

5. புல எண்.262H/35 மற்றும் புல எண்.262H/36க்கான அ பதிவேடு தாக்கல் செய்கிறேன் (பழையது). அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **சா.சா.ஆ.3** ஆகும்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.